2013 ஏப்ரல் 30]

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)*

8. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது. நீங்கள் இப்போது குறுக்கே எழுந்து, பேசுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அவையனைத்தும் என்னுடைய ஆய்வில் உள்ளன. அவற்றைப் பற்றியெல்லாம் திடீரென்று எழுந்து கேட்கக்கூடாது.* Zero hour-ல் *கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு) அரசின் அறிக்கை வந்தவுடனே கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும். அவற்றைப் பின்பு எடுத்துக் கொள்ளலாம், உட்காருங்கள்.*